1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார். நான், ஏற்கெனவே காப்புக் காடுகள் பகுதியிலே ஆக்கிரமிப்பு இல்லை என்பதை எழுத்து மூலமாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்து இருக்கிறேன். காப்புக் காடுகள் சுமார் 450 ஹெக்டேர், புறம்போக்கு 87.22 ஹெக்டேர். இதில் அவர்களுடைய ஆக்கிரமிப்பு என்பது புறம்போக்கு பகுதியில் 1.8 ஹெக்டேர். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பொட்டல் காடு என்கிறார்கள். மரம் இல்லை என்கிறார். மரம் இல்லாத அந்தப் பகுதியில் மரம் வளராததற்குக் காரணமே, அந்தப் பகுதியினுடைய மண் தன்மை மோசமாக இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவே தீர்வை ஏற்படாத தரிசு நிலம். இதற்குத் தீர்வையே இல்லை. எனவே, அதை ட்ரை லேண்டாகவே ரெவின்யூ துறை தீர்மானித்து இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து பல்வேறு நிலைகளில், பல்வேறு ஃபோரங்களில் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் போன்ற பல இடங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முயற்சி செய்து இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குடியிருக்கிற காரணத்தாலே அங்கே இருக்கிற ஏழைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்த அரசு அந்த நடவடிக்கையை எடுக்காது என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. சி. ஞானசேகரன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூன்றாவது கிளாரிஃபிகேஷன் எல்லாம் இல்லை. உட்காருங்கள்.*

4. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. இராம. இராமநாதன்: *மாண்புமிகு பேரவையினுடைய சிறப்புமிக்க தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி*

[திரு. இராம. இராமநாதன்] [*1994 நவம்பர் 8*

நடாத்தி, சமூக நீதி காத்திட்ட வீராங்கனையாகத் திகழ்ந்து, மக்கள் நலம் பேணி, எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, *1994-95* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக கீழ்க்காணும் அறிக்கையினை பேரவைக்கு அளிக்கின்றேன்.

"பொது நிறுவனங்கள் அலுவலர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் குறித்து குழு அளித்திட்ட 41-ஆவது அறிக்கை. 1989–90இல் கண்டுள்ள பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றிய 222–வது அறிக்கை."

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவுகள், அறிமுகம் செய்தல். *1994*-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1994*ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.